பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 12 2024 **MONDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவை உலகின் உணவு உற்பத்தி மையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

- காபி துறையின் வளர்ச்சிக்கு அரசு தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

- இளநிலை மருத்துவ பட்டப்படிப்புகளில் காலியாக உள்ள இடங்களுக்கு சிறப்பு கலந்தாய்வு நடத்துமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- UGC-NET தேர்வு தேதிகளை மாற்றியமைக்குமாறு, மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது

- உலக ஜூனியர் Pencak Silat சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nusrath Fathima வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<<>>>>>**

இந்தியாவை உலகின் உணவு உற்பத்தி மையமாக மாற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், வேளாண் பொருளாதார ஆராய்ச்சி மையத்தின் 70-ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று பேசிய அவர், விவசாயிகளின் தானிய சேமிப்பு திறனை அதிகரிக்கவும் அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.

வேளாண் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விஞ்ஞானிகளும், விவசாயிகளும் ஒருங்கிணைந்து முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஆராய்ச்சியாளர்களின் பணி ஆய்வுக்கூடத்தோடு நின்று விடாமல், விவசாயிகளை சென்றடைவதாக இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

விவசாயம் சார்ந்த தகவல்களை ஆங்கிலம் மட்டுமல்லாது, பிற மொழிகளிலும் வெளியிடுவது அவசியம் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

காபி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் உறுதியளித்துள்ளார்.

தேசிய விவசாயிகள் தினத்தையொட்டி, கர்நாடக மாநிலம் ஹாசனில் நடைபெற்ற காபி விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்று அவர் பேசினார்.

காபி உற்பத்தியை அதிகரிக்க தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு, காபி துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கர்நாடக காபி விவசாயிகளின் நலனுக்கான நடவடிக்கைகளை தாமும், மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு குமாரசாமியும் இணைந்து மேற்கொள்ள இருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், நாட்டின் ஆட்சிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நல்லாட்சி நடைமுறைகள் குறித்த தேசிய பயிலரங்கில் பேசிய அவர், அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு இடையேயான கூட்டு முயற்சியால் அரசின் நிர்வாக திறன் மேம்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அரசு கோப்புகளை டிஜிட்டல் மயமாக்கியதன் காரணமாக, அவற்றின் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க வழிவகை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தூய்மை இந்தியா இயக்கத்தின்மூலம், கடந்த நான்காண்டுகளில் அரசுக்கு 2 ஆயிரத்து 364 கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருப்பதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசு திட்டப்பணிகளை விரைவுபடுத்துமாறு மத்திய கனரக தொழில்துறை இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச சர்மா அறிவுறுத்தியுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து வேளாண் துறை அதிகாரிகளுடன் இன்று அவர் ஆய்வு செய்தார்.

மேலும், பரமக்குடியில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் விதை சுத்திகரிப்பு மைய கட்டுமானப்பணிகளையும் திரு பூபதி ராஜு சீனிவாச சர்மா பார்வையிட்டார்.

<<<<<<>>>>>

இந்தியாவில் நிர்வாக முடிவுகள், புள்ளிவிவர தரவுகள் மற்றும் தாக்க மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால், நாடு முன்னுதாரண மாற்றத்தை நோக்கிச் செல்வது அவசியமென நித்தி ஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி திரு.பிவிஆர் சுப்பிரமணியம் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மத்திய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணியாற்றும் புள்ளியியல் ஆலோசகர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அவர் பேசினார்.

அரசின் ஒவ்வொரு நிலையிலும் தரவுகள் முக்கிய இடம் வகிப்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்தத் தரவுகள் தரும் பகுப்பாய்வு விவரங்களின்படியே முடிவுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

எனவே, புள்ளியியல் சார்ந்த நடைமுறைகள் மற்றும் புதிய சாதனங்களைப் பயன்படுத்துவது குறித்து தொடர்ந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சி அல்லது மறுதிறன் பயிற்சி அளிக்கப்படுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தரவு மேலாண்மையை மேம்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட திரு.பி.வி.ஆர். சுப்பிரமணியம், தரவு ஆய்வகம் ஒன்று அமைக்கப்படுவதுடன் குறியீடுகள் மற்றும் ஆய்வுக்கான புதிய அடிப்படை ஆண்டை உருவாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நீட் தேர்வின் மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படும் இளநிலை மருத்துவ பட்டப் படிப்புகளில் காலியாக உள்ள இடங்களுக்கு, சிறப்பு கலந்தாய்வு நடத்துமாறு, மருத்துவ மாணவர் சேர்க்கை குழுவிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கைப் பரிசீலித்த நீதிபதிகள் பி.ஆர்.கவாய் மற்றும் கே.வி.விஸ்வநாதன் ஆகியோரடங்கிய அமர்வு, நாட்டில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக கூறியுள்ளது.

வெளிநாடுவாழ் இந்திய மாணவர்களுக்கான காலியிடங்களை, பொதுப்பிரிவுக்கு மாற்றி, அவற்றை நிரப்புமாறும், மாநில மருத்துவ சேர்க்கைக் குழுவினரை நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

<<<<<<>>>>>

பொங்கல் பண்டிகை நாட்களில் நடைபெறவுள்ள ‘UGC - NET ’ தேர்வு தேதியை மாற்றியமைக்குமாறு தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் UGC - NET தேர்வு அடுத்த மாதம் 3-ஆம் தேதிமுதல், 16-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் 13-ஆம் தேதிமுதல், 16-ஆம் தேதிவரை பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்த பண்டிகை நாட்களில் நெட் தேர்வு நடத்தப்பட்டால், மாணவர்கள் தேர்வுக்கு தயாராவதற்கும், எழுதுவதற்கும் தடையாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த தேர்வுகளை, வேறு தேதிகளில் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திரு கோவி செழியன் தமது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

யுனானி மருத்துவத் துறையில், புதிய அறிவியல் தொழில்நுட்பங்களைக் கையாள்வதன் மூலம், இத்துறையில் சர்வதேச அளவில் இந்தியா சிறந்து விளங்குவதாக மத்திய யுனானி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குனர் ஜாகீர் அஹமத் தெரிவித்துள்ளார்.

சென்னை ராயபுரத்தில் உள்ள மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் வட்டார யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தசை கூட்டு கோளாறுக்கான தடுப்பு

மற்றும் ஒழுங்குமுறை சிகிச்சைக்கான சமீபத்திய முயற்சிகள் குறித்த பயிலரங்கிற்கு தலைமையேற்று அவர் பேசினார்.

அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் ஆயுஷ் மருத்துவத்தில் புதிய பரிணாமங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக கூறிய அவர், டெஹ்ரான், கஜகஸ்தான், பங்களாதேஷ், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் ஆராய்ச்சிக்காக சர்வதேச அளவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் 37 ஆயிரம் மருத்துவ மையங்கள் மூலம் 7 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுஷ் மருத்துவர்கள், மக்களுக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும் திரு. ஜாஹீர் அகமது தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற விவசாயிகள் தின விழாவில், வாழை சாகுபடி குறித்த சிறப்பு கையேட்டினை இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக துணை தலைமை இயக்குனர் திரு சஞ்சய் குமார் சிங் இன்று வெளியிட்டார்.

ஷெல்யூல்டு வகுப்பை சேர்ந்த விவசாயிகளுக்கு திசு வாழைக் கன்றுகளையும் அவர் வழங்கினார்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த வாழை கண்காட்சியையும் திரு சஞ்சய்குமார் சிங் திறந்துவைத்தார்.

இந்த கண்காட்சியில், 150 வாழை ரகங்கள் இடம்பெற்றதுடன், வாழை சாகுபடியில் ஏற்பட்டுள்ள புதிய பரிணாமங்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

<<<<<<>>>>>>

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமான ட்ராய், மேம்படுத்தப்பட்ட அதன் இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தொலைத்தொடர்பு மற்றும் ஒலிபரப்பு ஒழுங்குமுறைகள், கொள்கைகள், சட்டங்கள், புள்ளிவிவரம் குறித்த விரிவான தகவல்கள், இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த தகவல்கள், பொதுமக்கள், ஆராய்ச்சியாளர்கள், சர்வதேச நேயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் எளிதில் அணுகும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக ட்ராய் கூறியுள்ளது.

தொலைத்தொடர்பு மற்றும் ஒலிபரப்புத் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஒழுங்குமுறை முன்முயற்சிகளில், வெளிப்படைத்தன்மையை அதிகரித்து, அனைவரும் எளிதில் அணுகும் வகையில், புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் Pencak Silat சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nusrath Fathima வெள்ளிப்பதக்கம் வென்றார்.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 58 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

Tashkent சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அதிபன் பாஸ்கரன் பட்டம் வென்றார்.

ஒன்பதாவது மற்றும் இறுதிச்சுற்று முடிவில் ஏழரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

-----------------

ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன் பிரீத் சிங் மற்றும் பாரா தடகள வீரர் பிரவீன்குமார் ஆகியோர் கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

----------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான எஞ்சிய இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்கான இந்திய அணியில் Tanush Kotian சேர்க்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து அஷ்வின் ஓய்வுபெற்றதையடுத்து, இவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**<<<<<<END>>>>>**